**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG10 - நிலை I - (Grade 1)**

நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)

மே, சூன் - 2017

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 75

## பகுதி - அ

**I** **எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. தமிழை முடியரசனார் எவ்வாறு வாழ்த்துகிறார்?
2. கல்வி எதை அழகுபடுத்தும்?
3. தமிழ் எழுத்துகள் ஓலையில் எவ்வாறு படிக்கப் பெறுகின்றன?
4. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
5. தமிழ்மொழி பழமையான மொழியா? புதுமையான மொழியா?
6. முக்கனி என்று எவற்றிற்குப் பெயர்?
7. சர்.சி.வி.இராமன் நோபல் பரிசை எந்த ஆண்டு பெற்றார்?
8. தமிழ் மண்டபம் எது?
9. ‘வற்றல் உண்டான்’ என்பதில் – ‘வற்றல்’ என்பது என்ன ஆகுபெயர் ஆகும்?
10. திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுத் தருக.

## பகுதி - ஆ

**II** **எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. உலகை உயர்த்தும் தொழில்கள் எவை?
2. நற்பண்பு உடையாளர் தொடர்பு எதனைப் போன்றது?
3. உறவினரின் அறிவுரை பற்றி பழமொழி கூறுவது யாது?
4. இயேசு பெருமான் யாரால், எவ்வாறு வணங்கப்படுகிறார்?
5. கிள்ளியின் பட்டத்து யானை எங்கெல்லாம் சென்று வெற்றி பெற்றது?
6. தமிழின் உதவியால் வாழும், வளரும் மொழிகள் எவை?
7. மிகப் பழைய காலம் முதலே வாழைமரங்கள் வளர்ந்த நாடுகள் எவை?
8. காஞ்சிபுரப் பட்டுவின் சிறப்புகள் யாவை?
9. சர்.சி.வி. இராமன் எந்த ஆண்டில், எங்கு பிறந்தார்?
10. மாறவர்மன் சுந்தரபாண்டியன் மண்டபத்தை ஏன் இடிக்கவில்லை?
11. மூன்று வகை மெய்யெழுத்துகள் எவை?
12. தமிழில் உள்ள ஐந்து பால்கள் எவை?

13. வேற்றுமை உருபுகளை எழுதுக.
14. வினையெச்சம் என்றால் என்ன?
15. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - இ

**III** **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. கல்வியின் சிறப்புகளாக நாலடியார் கூறுவன எவை?
2. திருப்பாவை பாடிய ஆண்டாள் பற்றிக் கூறுக.
3. வருகின்ற பாரதத்தில் பாரதியார் கூறும் கருத்துகள் யாவை?
4. வாழைப்பழத்தின் சிறப்புகளை எழுதுக.
5. சர்.சி.வி. இராமன் எதனை கண்டுபிடித்தார்?
6. காஞ்சி கைலாச நாதர் கோவிலின் சிறப்புகளை எழுதுக.
7. முக்கால இடைநிலைகளை எழுதுக.
8. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - ஈ

**IV** **ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. உயர்ந்த மனிதனாக வாழும் வழிமுறைகளாக பட்டுக்கோட்டையார் கூறுவன யாவை?
2. தமிழ்மொழி பழமையானது என்பதனைச் சான்றுடன் விளக்குக.
3. ஆகுபெயரின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - உ

**V** **ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. ‘நட்பு’ என்ற தலைப்பில் திருவள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து கட்டுரை வடிவில் எழுதுக.
2. நோபல் பரிசு பெற்ற தமிழர் பற்றி கட்டுரை வடிவில் எழுதுக.